தமிழ்நாடு அரசு – இந்து சமய அறநிலையத்துறை

# அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில், திருவண்ணாமலை

## வேலைவாய்ப்பு அறிவிப்பு

நாள்.27.01.2025

திருவண்ணாமலை, அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயிலில் கீழ்க்கண்ட விவரப்படியான காலிப்பணியிடங்களுக்கு பணியாளர்கள் நியமனம் செய்ய தகுதி வாய்ந்த இந்து மதத்தை சார்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து 28.02.2025 பிற்பகல் 05.45 மணி வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. அதற்கு பின்னர் வரப்பெறும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**I. வெளித்துறை காலிப்பணியிடங்கள்**

| வ. எண் | பதவியின் பெயர் | காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை | சம்பள விகிதம் ரூ. | தகுதிகள் |
|---|---|---|---|---|
| 1 | தட்டச்சர் | 1 | 18500–58600 Pay Matrix–22 | 1) பத்தாம் வகுப்பு தேர்ச்சி அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட அதற்கு இணையான கல்வித் தகுதி மற்றும்.<br>2) அரசு தொழில்நுட்பத் தட்டச்சர் தேர்வில் தட்டச்சு தேர்ச்சி பெற்றிருத்தல்.<br>(i) தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் முதுநிலை (அல்லது)<br>(ii) தமிழில் முதுநிலை மற்றும் ஆங்கிலத்தில் இளநிலை (அல்லது)<br>(iii) ஆங்கிலத்தில் முதுநிலை மற்றும் தமிழில் இளநிலை.<br>ஆனால், இனம் (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகுதியை விண்ணப்பதாரர் பெறாத நேர்வில், இனம் (ii)இல் அல்லது (iii) இல் உள்ள தகுதிகளை பெற்ற விண்ணப்பதாரர்கள் மேற்சொன்ன முன்னுரிமை வரிசையில் நியமிக்கப்படலாம்.<br>3) கணினி பயன்பாடு மற்றும் அலுவலகத் தானியக்கத்தில் சான்றிதழ் படிப்பில் தேர்ச்சி அல்லது அதற்கு இணையான அரசால் அங்கீகரிக்கப்பட்ட படிப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். |
| 2 | காவலர் | 70 (ஆண்கள்–60) பெண்கள்–10) | 15900–50400 Pay Matrix–17 | தமிழில் படிக்க மற்றும் எழுத தெரிந்திருக்க வேண்டும். |
| 3 | கூர்க்கா | 2 | 15900–50400 Pay Matrix–17 | தமிழில் படிக்க மற்றும் எழுத தெரிந்திருக்க வேண்டும். |
| 4 | ஏவலாள் (பண்ணை சாகுபடி) | 2 | 10000-31500 Pay Matrix-10 | தமிழில் படிக்க மற்றும் எழுத தெரிந்திருக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | உபகோயில் பெருக்குபவர் | 2 | 10000-31500 Pay Matrix-10 | தமிழில் படிக்க மற்றும் எழுத தெரிந்திருக்க வேண்டும். |
| 6 | கால்நடை பராமரிப்பாளர் | 1 | 10000-31500 Pay Matrix-10 | தமிழில் படிக்க மற்றும் எழுத தெரிந்திருக்க வேண்டும். |
| 7 | உபகோயில் காவலர் | 2 | 11600-36800 Pay Matrix-12 | தமிழில் படிக்க மற்றும் எழுத தெரிந்திருக்க வேண்டும். |
| **II. உள்துறை காலிப்பணியிடங்கள்** | | | | |
| 8 | திருமஞ்சனம் | 3 | 11600-36800 Pay Matrix-12 | 1) தமிழில் எழுதவும் படிக்கவும் தெரிந்திருக்க வேண்டும் மற்றும்<br>2) யாதொரு சமய நிறுவனங்களால் அல்லது அரசு நிறுவனங்களால் அல்லது ஏனைய யாதொரு நிறுவனத்தால் நடத்தப்படும் ஆகமப்பள்ளி அல்லது வேதபாட சாலையில் தொடர்புடைய துறையில் ஓராண்டு படிப்பினை மேற்கொண்டதற்கான சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும். |
| 9 | முறை ஸ்தானீகம் | 10 | 10000-31500 Pay Matrix-10 | 1) தமிழில் எழுதவும் படிக்கவும் தெரிந்திருக்க வேண்டும்; மற்றும்<br>2) யாதொரு சமய நிறுவனங்களால் அல்லது அரசு நிறுவனங்களால் அல்லது ஏனைய யாதொரு நிறுவனத்தால் நடத்தப்படும் ஆகமப் பள்ளி அல்லது வேதபாட சாலையில் தொடர்புடைய துறையில் ஓராண்டு படிப்பினை மேற்கொண்டதற்கான சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும். |
| 10 | ஒடல் | 2 | 15900-50400 Pay Matrix-17 | 1) தமிழில் எழுதவும், படிக்கவும் தெரிந்திருக்க வேண்டும். மற்றும்<br>2) யாதொரு சமய நிறுவனங்கள் அல்லது அரசு நிறுவனங்கள் அல்லது ஏனைய யாதொரு அரசால் அங்கீகரிக்கப்பட்ட யாதொரு நிறுவனங்களால் நடத்தப்படும் இசைப்பள்ளிகளில் இருந்து இதுதொடர்புடைய துறையில் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். |
| 11 | தாளம். | 3 | 18500-58600 Pay Matrix-22 | 1) தமிழில் எழுதவும், படிக்கவும் தெரிந்திருக்க வேண்டும். மற்றும்<br>2) யாதொரு சமய நிறுவனங்கள் அல்லது அரசு நிறுவனங்கள் அல்லது ஏனைய யாதொரு அரசால் அங்கீகரிக்கப்பட்ட யாதொரு நிறுவனங்களால் நடத்தப்படும் இசைப்பள்ளிகளில் இருந்து இதுதொடர்புடைய துறையில் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| **III. தொழில்நுட்ப காலிப்பணியிடங்கள்** | | | | |
| 12 | தொழில்நுட்ப உதவியாளர் (மின்னனு மற்றும் தொலைத் தொடர்பு) | 1 | 20600-65500-Pay Matrix-27 | மின்னணு மற்றும் தொலைத்தொடர்பு பொறியியலில் பட்டயப்படிப்பு. |
| 13 | பிளம்பர் | 4 | 18000–56900 Pay Matrix–19 | 1) அரசால் / அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் (I.T.I.), குழாய் தொழில் / குழாய் பணியர் (Plumber Trade) பாடப்பிரிவில் வழங்கப்படும் தொழிற்பயிற்சி நிறுவனச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். மற்றும்<br>2) தொடர்புடைய பிரிவில் ஐந்தாண்டுகள் அனுபவம் அல்லது இரண்டாண்டுகள் தொழில் பழகுநர் (Apprenticeship) அனுபவம் பெற்றிருக்க வேண்டும். |
| 14 | உதவி மின்பணியாளர் | 2 | 16600–52400 Pay Matrix–18 | 1) அரசால்/ அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் (I.T.I.) வழங்கப்பட்ட மின் (Electrical) /மின் கம்பி பணியாளர் பாடப்பிரிவில் (Wireman Trade) தொழிற்பயிற்சி நிறுவனச்சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.<br>2) மின் உரிமம் வழங்கல் வாரியத்திடமிருந்து "H" சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். |
| **IV. அர்ச்சகர் மற்றும் ஓதுவார் பயிற்சி பள்ளி காலிப்பணியிடங்கள்** | | | | |
| 15 | தலைமை ஆசிரியர் | 1 | 36700-116200-Pay Matrix-35 | 1) தமிழில் முதுகலைப் பட்டமும், ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் ஒரு இளநிலைப் பட்டமும் பெற்றிருக்க வேண்டும். (B.T., or B.Ed.,)<br>2) ஏதேனும் ஒரு மேனிலைப் பள்ளியில் ஐந்து ஆண்டுகளுக்கு குறையாமல் தமிழ் ஆசிரியராக பணிபுரிந்திருக்க வேண்டும். தத்துவம், சமயம் மற்றும் பண்பாடு போன்றவற்றில் முதுகலை பட்டம் பெற்றிருக்கும் விண்ணப்பதாரருக்கு முன்னுரிமை வழங்கப்படும். |
| 16 | தேவார ஆசிரியர் | 1 | 35400-112400-Pay Matrix-28 | 1) தமிழில் எழுதவும் படிக்கவும் தெரிந்திருக்க வேண்டும். மற்றும்<br>2) யாதொரு ஆகம பள்ளி (அல்லது), தேவார பாடசாலைகள் (அல்லது) வேத பாடசாலைகளில் மூன்றாண்டுகள் படிப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். |
| 17 | சங்கீத இசை ஆசிரியர் | 1 | 35400-112400-Pay Matrix-28 | 1) குரலிசையில் மூன்று வருட பட்டய படிப்பு முடித்திருக்க வேண்டும். (அல்லது)<br>இசையில் பட்டப்படிப்பு முடித்திருக்க வேண்டும். மற்றும்<br>2) இசை ஆசிரியர் பயிற்சி படிப்பில் தேர்ச்சி. |

| | | | | |
|---|---|---|---|---|
| 18 | ஆகம ஆசிரியர் | 1 | 35900-113500-Pay Matrix-31 | 1) ஏதேனும் வேத ஆகம பாடசாலையில் (சைவம்) ஐந்தாண்டுகளுக்குக் குறையாமல் ஆசிரியராகப் பணிபுரிந்த அனுபவம் பெற்றிருக்க வேண்டும் (அல்லது) இந்து சமய மற்றும் அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள ஏதேனும் ஒரு கோயிலில் ஐந்தாண்டு கால அளவிற்கு குறையாமல் முதுநிலை அர்ச்சகராக பணிபுரிந்திருக்க வேண்டும். 2) சைவ ஆகமத்தில் தற்போதுள்ள வேத, ஆகம பாடசாலையில் நான்கு ஆண்டு பாடப்பிரிவில் சான்றிதழ் படிப்பை முடித்திருக்க வேண்டும். |
| | **கூடுதல்** | **109** | | |

## நிபந்தனைகள்

1) விண்ணப்பதாரர் 01.07.2024–ந் தேதியில் 18 வயது பூர்த்தியடைந்தவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

2) இந்து மதத்தை சார்ந்தவராகவும் (உரிய ஆவணங்கள் இணைக்கப்பட வேண்டும்), இறை நம்பிக்கை உடையவராகவும், தமிழ்நாட்டை சார்ந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

3) தொற்று நோய், மனநிலை குன்றிய குறைபாடுகள் உள்ளவர்கள் விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள்.

4) நீதிமன்றத்தில் தண்டனை அடைந்தவர்கள், பட்ட கடனை தீர்க்க முடியாதவர்கள் என நீதிமன்றத்தில் தீர்மானிக்கப்பட்டவர்கள் அரசுப் பணியிலிருந்து பொது ஸ்தாபனங்களில் இருந்தும் இதர திருக்கோயில்களில் இருந்தும் பணிபுரிந்து தண்டனை காரணமாக பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள், திருக்கோயிலுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தவர்கள், அவர்களின் வாரிசுதாரர்கள் ஆகியோர்கள் மேற்படி பணிக்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள்.

5) நன்னடத்தை உடையவராக இருக்க வேண்டும். இதற்கு அரசிதழ் பதிவுபெற்ற அதிகாரியிடமிருந்து பெறப்பட்ட நன்னடத்தைச் சான்று பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

6) ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும்.

7) வெளித்துறை பணியிடங்களில் வரிசை எண்.2–ல் குறிப்பிடப்பட்டுள்ள காவலர் பணியிடத்தில் 60 பணியிடங்கள் ஆண்களும், 10 பணியிடங்கள் பெண்களும் நியமனம் செய்யப்பட உள்ளது.

8) இவ்விளம்பரம் செய்யப்பட்ட தேதிக்கு பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

9) விண்ணப்பத்துடன் கல்வித் தகுதிக்குரிய சான்றிதழ்கள் மற்றும் கூடுதல் தகுதிக்கான சான்றிதழ்கள் மற்றும் ஆதார், வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை போன்ற பிற ஆவணங்களின் நகல்களை சுய சான்றொப்பம் செய்து (Self Attested) இணைக்கப்பட வேண்டும். (அசல் சான்றிதழ் அனுப்பக்கூடாது)

10) விண்ணப்பதாரர் வயதிற்கான சான்று ஆவணமாக பிறப்புச்சான்றிதழ் நகல் அல்லது கல்வி நிலையத்தால் வழங்கப்பட்ட மாற்று சான்றிதழ் (Transfer Certificate) நகல் இணைக்கப்பட வேண்டும்.

11) விண்ணப்பதாரர் கல்விச் சான்று நகல், வயதுச்சான்று நகல், உடல் தகுதிக்கான மருத்துவச் சான்று நகல் மற்றும் நன்னடத்தைச் சான்று நகல் ஆகியவற்றை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

12) விண்ணப்ப படிவத்தில் விவரங்கள் முழுமையாக பூர்த்தி செய்யப்படாமலும், கேட்கப்பட்ட சான்று நகல்கள் இணைக்கப்படாமலும், வரப்பெறும் விண்ணப்பங்கள் ஆரம்ப நிலையிலேயே நிராகரிக்கப்படும்.

13) தேர்ந்தெடுக்கப்படும் பணியாளர் இத்திருக்கோயிலின் உபகோயில்களுக்கும் பணியிட மாறுதல் செய்யப்படுவர்.

14) பணிக்கு தேர்வாகும் விண்ணப்பதாரர் பணியில் சேர வரும் நேரத்தில் விண்ணப்பதாரர் வசிக்கும் எல்லைக்கு உட்பட்ட காவல் நிலையத்தில் விண்ணப்பதாரர் மீது குற்றவியல் நடவடிக்கை ஏதும் இல்லை என்ற சான்றிதழ் மற்றும் உடல் தகுதி சான்றிதழின் அசல் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

15) விண்ணப்பங்களை அனுப்பும் போது மேல் உறையின் மீது கண்டிப்பாக பதவியின் பெயரை குறிப்பிட்டு நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ அனுப்பப்பட வேண்டும்.

16) நேர்முக தேர்வில் கலந்து கொள்வதற்கு எவ்வித பயணப்படியும் வழங்கப்பட மாட்டாது.

17) விண்ணப்பதாரர் விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் கல்வி தகுதி மற்றும் பிற தகுதிக்குரிய ஆவணங்களின் அசல் சான்றிதழ்கள் நேர்முக தேர்வின் போது கண்டிப்பாக கொண்டு வரப்பட வேண்டும்.

18) விண்ணப்பதாரரால் தெரிவிக்கப்படும் விவரங்கள் அனைத்தும் சரியானவை என உறுதியளிக்க வேண்டும். தவறான தகவல்கள் அல்லது போலியான ஆவணங்கள் ஏதேனும் அளித்து பணி நியமன ஆணை பெறப்படும் பட்சத்தில் எவ்வித முன் அறிவிப்புமின்றி பணி நீக்கம் செய்தும், சட்ட ரீதியான குற்றவியல் நடவடிக்கைகளுக்கும் உட்படுத்தப்படுவர்.

19) நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் பெறப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படும். மேலும், தகுதியான விண்ணப்பதாரர்கள் மட்டுமே பரிசீலனைக்கு பின்னர் நேர்முக தேர்விற்கு அழைக்கப்படுவர். தகுதி இல்லாதவிண்ணப்பங்களுக்கு திருக்கோயிலில் இருந்து எவ்வித தகவலும் அனுப்பப்படமாட்டாது.

20) விண்ணப்பதாரர்களால் வழங்கப்படும் சான்றுகள் அனைத்தும் சம்பந்தப்பட்ட துறைகளின் மூலம் உண்மைத்தன்மை குறித்து பரிசீலனைக்கு உட்படுத்தப்படும்.

21) பணி நியமனம் அரசாணை (நிலை) எண்.114, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அ.நி.4–2) நாள் 03.09.2020 விதிகளுக்குட்பட்டது. அரசாணை எண்.219 சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அ.நி.4–2) நாள்.02.09.2022 விதிகளுக்குட்பட்டது.

22) அரசாணை (நிலை) எண்.114, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அ.நி.4–2) துறை நாள் 03.09.2020 விதி எண்.9–ன்படி முதுநிலை அல்லாத திருக்கோயில்களில் பணிபுரியும் தகுதியான பணியாளர்கள் விண்ணப்பிக்கலாம்.

23) தேர்வு முறையானது அடிப்படை கல்வித்தகுதி, அனுபவம், செயல்முறை தேர்வுகள் கூடுதல் தகுதி மற்றும் நேர்முக தேர்வு ஆகியவற்றில் பெறும் மதிப்பெண்கள் அடிப்படையில் நடைபெறும்.

24) விண்ணப்ப படிவத்தினை www.hrce.tn.gov.in மற்றும் https://annamalaiyar.hrce.tn.gov.in என்ற திருக்கோயில் இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். அல்லது திருக்கோயில் அலுவலகத்தில் ரூ.100/- செலுத்தி விண்ணப்பத்தினை அலுவலக நாட்களில், அலுவலக நேரத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

25) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை உரிய சான்றுகளுடன், அஞ்சல் உறையில் **"பணியிட வரிசை எண்..........** மற்றும் ....................................... **பணியிடத்திற்கான விண்ணப்பம்"** என தெளிவாக குறிப்பிட்டு **"இணை ஆணையர் / செயல் அலுவலர், அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில், திருவண்ணாமலை -606 601"** என்ற முகவரிக்கு நேரிலோ/அஞ்சல் மூலமாகவோ அனுப்ப வேண்டும். மேலும், ரூ.25/- மதிப்புள்ள அஞ்சல் வில்லை ஒட்டிய சுயவிலாசமிட்ட அஞ்சல் உறையுடனும் இணைத்து அனுப்ப வேண்டும். மேற்படி, இணைப்புகளுடன் வரப்பெறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

26) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 28.02.2025 பிற்பகல் 5.45 மணிக்குள்.

27) இதர விபரங்களை அலுவலகத்தில், அலுவலக நாட்களில், அலுவலக நேரத்தில் நேரில் கேட்டு தெரிந்துகொள்ளலாம்.

<u>விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி :</u>

இணை ஆணையர் / செயல் அலுவலர்,
அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில்,
திருவண்ணாமலை.

(ஒம்) இரா.ஜீவானந்தம்
அறங்காவலர் குழுத்தலைவர்

(ஒம்) சி.ஜோதி
இணை ஆணையர் / செயல் அலுவலர்.

(ஒம்) உ.மீனாட்சி சுந்தரம், (ஒம்) T.V.S.இராசாராம்,
(ஒம்) கு.கோமதிகுணசேகரன், (ஒம்) இராம.பெருமாள்
அறங்காவலர்கள்.

# அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில்

# திருவண்ணாமலை

**விண்ணப்பிக்கும் பதவியின் பெயர்**………………………………………………….

| விண்ணப்பதாரரின் புகைப்படம் |
|---|

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயர் | : | |
| 2. | தந்தை / கணவர் / பாதுகாவலர் பெயர் | : | |
| 3. | பிறந்த தேதி மற்றும் வயது (பள்ளிச் சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 4. | பாலினம் (ஆண்/பெண்) | : | |
| 5. | நிரந்தர முகவரி | : | |
| 6. | ஆதார் எண் குறிப்பிடவும் (சான்று இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 7. | கைப்பேசி எண் | : | |
| 8. | மதம் (சாதிச்சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 9. | விண்ணப்பதாரர் 01.07.2024 அன்று 18 வயது பூர்த்தியடைந்தவராகவும், 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருப்பவரா? | : | ஆம்/இல்லை. |
| 10. | கல்வித்தகுதி (நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதிக்கான சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 11. | இதர தகுதிகள் ஏதும் இருப்பின் இணைக்கப்பட வேண்டும் | : | |
| 12. | அரசிதழ் பதிவுபெற்ற அதிகாரியிடமிருந்து 29.01.2025–க்கு பின்னர் பெறப்பட்ட நன்னடத்தை சான்று இணைக்கப்பட வேண்டும். | : | |

| | | | |
|---|---|---|---|
| 13. | குற்றவியல் நடவடிக்கை இருப்பின் அதன் விவரம்.<br>(அ) பதிவு செய்யப்பட்டுள்ளதா?<br>(ஆ) நிலுவையிலுள்ளதா?<br>(இ)................................................... தண்டனை வழங்கப்பட்டுள்ளதா? | : | <br><br>ஆம்/இல்லை.<br>ஆம்/இல்லை.<br>ஆம்/இல்லை. |
| 14. | விண்ணப்பிக்கும் பணியில் முன் அனுபவம் இருப்பின் அதன் விவரம் பிற நிறுவனங்களில் பணிபுரிந்த அனுபவம் (சான்றிதழ் நகல் இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 15. | இந்து சமய அறநிலையத்துறை ஆளுகையின் கீழ் உள்ள முதுநிலை அல்லாத திருக்கோயில் பணியாளர் எனில் அதன் விவரம். | : | |
| | அ) பெயர் | : | |
| | ஆ) தந்தை / கணவர்/பாதுகாவலர் பெயர் | : | |
| | இ) பதவி | : | |
| | ஈ) பணியில் சேர்ந்த நாள் | : | |
| | உ) பணிபுரியும் திருக்கோயில் | : | |
| | ஊ) பணிபுரிந்து வருவதற்கான சான்று | : | |
| | எ) நன்னடத்தை சான்று | : | |

## <u>உறுதிமொழி</u>

...................................................... ஆகிய நான் தந்தை / கணவர்/ பாதுகாவலர் பெயர் .................................................... இவ்விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள மேற்காணும் அனைத்து தகவல்களும், இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களும் சரியானவை என உறுதி கூறுகிறேன். எதிர்காலத்தில் மேற்படி தகவல்கள் தவறானவை எனவும், இணைக்கப்பட்ட ஆவணங்கள் போலியானவை எனவும் தெரியவந்தால், என் மீது திருக்கோயில் நிர்வாகத்தால் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி பணி நீக்கம் செய்யவும், குற்றவியல் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தவும் சம்மதித்து உறுதி அளிக்கிறேன்.

இடம் : விண்ணப்பதாரரின் கையொப்பம்.

தேதி :